# GST ROAD NEWS

Email:gstroadnews@gmail.com **CHROMPET** Weekly News Paper www.gstroadnews.com

Chrompet, Radha Nagar, Hasthinapuram, New Colony, Nehru Nagar

Vol:13 Issue -21 31 Aug 2025 - 06 Sep 2025 4 Pages - Free Circulation Ct: 99628 80902



LAPTOPS & COMPUTERS
SALES | SERVICES | ACCESSORIES



ஐசர்விஸ்
iService®
DOOR STEP SERVICE
MONDAY to SUNDAY
10 AM TO 6 PM
No3.PADMANABHA STREET, NEHRU NAGAR, CHROMEPET
99401 60664, 94444 39494

ஆட்கள் தேவை
சூப்பர் மார்க்கெட் அனுபவமுள்ள மேனேஜர் தேவை
Day2Day
பம்மல்
98840 95067

3 BHK INDEPENDENT DUPLEX HOUSE FOR SALE @ CHROMPET
3 BHK
AS PER VASTHU, CCP, LOAN ARRANGED



SITE ADDRESS : HASTHINAPURAM, SARASWATHI NAGAR NR. THIRUMALAI NAGAR, ZION SCHOOL
MANICKAM CONSTRUCTION
OFF.ADDRESS: PLOT NO.37, 7TH MAIN ROAD, VINOBAJI NAGAR, HASTHINAPURAM, CHENNAI - 64.
94442 14382
94442 55004

16 YEARS IN QUALITY SERVICE
Celebrate YOUR SPECIAL DAY IN A SPECIAL PLACE
Apoorvaa
ஹோட்டல் அபூர்வா
சைவ உணவகம்







The Chennai Silks
வளாகம்
குரோம்பேட்டை
கொங்கின் அசல் சுவை ஆனந்தமான அனுபவம்
NEWLY OPENED
BANQUET HALL
FOR BOOKING
+91 97863 99999
+91 91599 92025

Premium Villa Plots
VANDALUR
APPROVED CMDA APPROVED
PROJECT FEATURES
• Solar Street Lights
• Internal Concrete Road
• Metro Water Connection
• Secured Compound
• Avenue Trees
KEY FEATURES
• Overlooking 1500 acre Vandalur Forest Reserve
• Near Shriram IT Gateway
• Near Vandalur Zoo
• Near upcoming Metro
One Earth Consulting & Advisory
+91 99940 53640

PAAVAYEE BUILDERS
Since 1988 Flat Promoters | Individual Villas | Commercial
PREMIUM FLATS FOR SALE @ HASTHINAPURAM
3 BHK
ONLY ONE UNIT AVAILABLE
✓ Lift ✓ CCP ✓ CCTV
✓ Metro Water ✓ Video Door
No Water Logging
SITE ADDRESS : MC NAGAR 1st MAIN ROAD, (OPP. TO SAI BABA TEMPLE), HASTHINAPURAM, CHITLAPAKKAM.
READY TO OCCUPY



Stilt + 3 Floors
Office Address : New No.27, Old No.15, Church Road, Radha Nagar, Chrompet, Chennai-44.
98410 69244 / 98408 66223

IND.VILLA FOR SALE
@CHROMPET, THIRUMALAI NAGAR
Nr.PONNIYAMMAN KOVIL
MAYILAI RAMAMURTHY ST
3 BHK
LAND AREA - 1200 Sqft
BUILD UP AREA 1900 Sqft
☑ 24 Hrs Water ☑ As per vasthu ☑ 100% Red Bricks



FLATS FOR SALE
@CHROMPET
RADHA NAGAR GANAPATHIPURAM
JUST 200 ft RADIAL ROAD
SRI KRISHNA FLATS



4-BHK 1475 Sqft
2-BHK 868 Sqft
2-BHK 892 Sqft
Lift/CCP/CCTV
AS PER VASTHU / 24 HRS WATER
PerSqft.₹6699
JEEVA REKHA BUILDERS
78457 64414/ 88255 43215

FLATS FOR SALE
@ CHROMPET
THIRUMALAI NAGAR
NISHAN APARTMENT



5th STREET
NR. ZION SCHOOL
2 BHK 960Sqft
3 BHK 1200 Sqft
LIFT/CCP/CCTV/ VIDEO DOOR PHONE
AS PER VAASTHU / 24 HRS WATER
NISHAN CONSTRUCTION 98409 84126

PREMIUM FLATS FOR SALE @ CHROMPET
THIRUMALAI NAGAR, Nr. Zion School
Natarajan Apartment



2 BHK -980Sqft
3 BHK-1240 Sqft
Rs.72L (ALL INCLUSIVE)
☑ Lift ☑ CCP ☑ CCTV ☑ As Per Vasthu
GJ CONSTRUCTION
98409 41585

PREMIUM 2,3,4 BHK FLATS FOR SALE @ CHROMEPET

PADMANABHA NAGAR
Nr. KARUMARI AMMAN TEMPLE
NEW Projects
24 HRS POWER BACKUP*



4 BHK - 1825 Sqft
2 BHK - 941 & 898 Sqft

KRISHNA NAGAR
Nr. HASTHINAPURAM BUS STAND



24 HRS POWER BACKUP*
3 BHK - 1287 Sqft

BASHYAM NAGAR
Nr. ABIRAMI KALYANA MANDABAM
NEW Projects
24 HRS POWER BACKUP*



3 BHK - 1132 Sqft
2 BHK - 1028 Sqft

Specification
With Lift
As Per Vaasthu
CCP
CCTV
Videodoor Phone
Red Bricks Construction

Sankar Constructions
98416 59929 / 98416 59930
Project Approved by: LIC HFL LIC HOUSING FINANCE LTD, HDFC BANK, SBI

# கேரள மக்களின் பாரம்பரிய விழாவான ஓணம் பண்டிகை

ஜாதி, மத பேதமின்றிக் கொண்டாடப்படும் மிகப் பெரிய திருவிழாவான ஓணம் பண்டிகை பத்து நாட்கள் கொண்டாடப்படுகிறது. "அத்தம் (ஹஸ்தம்) தொடங்கி பத்து நாள்வரை' என்பது சொல்வழக்கு.

ஆவணி மாதத்தில் ஹஸ்தம் நட்சத்திரத்தில் தொடங்கும் விழா, சித்திரை, சுவாதி, விசாகம், அனுசம், கேட்டை, மூலம், பூராடம், உத்ராடம், திருவோணம் என பத்து நட்சத்திர நாளிலும் கொண்டாடப்படுகிறது. கடைசி நாளான திருவோணத்தன்று தன் மக்களைத் தேடி வரும் மகாபலி மன்னனை வரவேற்க கேரள மக்கள் தங்கள் வீட்டு வாசல்களில் "அத்தப் பூக்கோலம்' போட்டு, புத்தாடைகள் அணிந்து தீபாவளி போன்றே பட்டாசுகள் வெடித்துக் கொண்டாடுகின்றனர்.

மகாபலி மன்னனும் வாமனனும்

ஒரு முறை சிவாலயத்துள் எரிந்து கொண்டிருந்த விளக்கின் திரியைத் தூண்டிப்பிரகாசமாக எரிய உபகாரம் செய்தது ஒரு எலி. எனவே அவ்வெலிக்கு மூன்று லோகத்தையும் ஆட்சி செய்யும் அதிகாரத்தை வழங்கினார் சிவபெருமான். அந்த எலியானது மறு பிறப்பில் மகாபலி என்ற என்ற பெயருடன் மன்னாக பிறந்து சக்ரவர்த்தியாகி மூவுலகையும் சிறப்பாக ஆட்சி புரிந்தான்.

மகாபலி மன்னனின் ஆட்சியில் மக்கள் எந்த துன்பமும்இன்றி மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். அசுரகுலத்தின் அசுரவேக வளர்ச்சியைக் கண்ட தேவர்கள் மகாபலி மன்னனுடன் போரிட்டனர். போரில் அசுர குலம் ஜெயிக்கவே தேவர்குலம் பயந்து திருமாலிடம் முறையிட்டனர். திருமாலை மகனாக அடைய வேண்டி காசிப முனிவரின் மனைவியான திதி என்பவள் வரம் கேட்க, அதன்படியே அவர்களுடைய மகனாக வாமன அவதாரம் எடுத்தார் திருமால்.

அசுரனாக இருந்தாலும் தான தர்மங்களிலும், யாகங்கள் நடத்துவதிலும் மகாபலி மன்னன் சிறந்தவனாக விளங்கினான். அதனை தமக்கு சாதகமாக பயன்படுத்த நினைத்த வாமனன் மகாபலியின் அரண்மனைக்குச் சென்று தான் தவம் செய்வதற்காக மூன்றடி மண் கேட்டார். வந்திருப்பது திருமால் என்பதை அறிந்த அசுரகுருவான சுக்கிராச்சாரியார் தானம்தர ஒப்புக்கொள்ள வேண்டாமென மகாபலியை தடுத்தார். இறைவனே தம்மிடம் கையேந்தி நிற்பதை அறிந்த மகாபலி மன்னன் குரு சொன்னதை கேளாமல் மூன்றடி மண் தானம் தர ஒப்புக் கொண்டார். உடனே திரிவிக்கிரம அவதாரம் எடுத்த திருமால் ஓரடியால் பூலோகத்தையும், மற்றொரு அடியால் தேவலோகத்தையும், மூன்றாவது அடிக்கு இடமில்லையே என்றுக் கூற மகாபலி மன்னன் தன் சிரம்மேல் மூன்றாவது அடியை அளக்குமாறுக் கூறினான். அதன்படி அவன் சிரம் மீது கால்வைத்து அழுத்த அவன் பாதாள லோகத்திற்குள் சென்றான்.

அந்த சமயத்தில் மகாபலி சக்ரவர்த்தி, வாமனனிடம் தான் ஆண்டுக்கு ஒருமுறை மக்களை வந்து பார்க்க வேண்டும் என்று அனுமதி கேட்டார். அதற்கு வாமனனும் வரமளித்தார். அப்படி தன் மக்களை காண மகாபலி சக்ரவர்த்தி காண வரும் நாளே ஓணத் திருநாளாக கொண்டாடப்படுகிறது.

தங்களை காண வரும் மன்னனை வரவேற்கவும், தாங்கள் மகிழ்ச்சியாக இருப்பதை காட்டவே மலையாள மக்கள் வாசலில் பூக்களால் கோலமிட்டு அதில் தீபம் ஏற்றி வழிபடுகின்றனர்.

ஓண சத்ய விருந்து

ஓண சத்ய எனப்படும் ஓணவிருந்தில் பரிமாறப்படும் பலகார வகைகளை கேட்டாலே வயிறு நிறைந்து விடும். கேரளத்தின் பாரம்பரிய உணவு வகைகளான அவியல், தோரன்,காலன், ஓலன், பச்சடி, கிச்சடி, இஞ்சிப்புளி, மாங்காய், எலிசேரி, கூட்டுக்கரி ஆகியவற்றை தலைவாழை இலைபோட்டு பரிமாறப்படும். பின்னர் பூவன்பழம், சர்க்கரை, உப்பேரி, காவற்றல், விளம்பி, சாதத்தில் பருப்போடு நெய் சேர்த்து பப்படம் வைத்து உண்ணுவார்கள். பின்னர் சாம்பார் சேர்த்து உண்டபின் பிரதமன் எனப்படும் பாயசாத்தை ஒரு பிடி பிடிப்பார்கள். பின் புளுசேரி கூட்டி, இன்னொரு சுவை,



இறுதியாக மோர் கூட்டான் சேர்த்து உண்டு எழுந்தால் வயிறு நிறைந்துவிடும்.

கும்மி கொட்டி விளையாட்டு

விருந்துண்ட பின்பு பெண்கள் ஓணம் சேலை கட்டிக்கொண்டு கோலத்தை சுற்றி கும்மி கொட்டுவர். பின்னர் வீட்டு வாசலில் ஊஞ்சல் கட்டியும், பந்துகள் விளையாடியும் மகிழ்ச்சியுடன் ஓணத்தை கொண்டாடுகின்றனர். மக்கள் மகிழ்ச்சியுடன் இருப்பதை அறிந்த மகாபலி மன்னனும் அவர்களுக்கு ஆசிகளை வழங்கிவிட்டு மீண்டும் பாதள லோகம் செல்கின்றார் என்பது புராணகதை.

புதுமணத் தம்பதிகள் இந்த நாளை தலை தீபாவளி போன்று தலை ஓணம் என்று மிகவும் மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர். கேரளம் மட்டுமின்றி, மலையாள மொழி பேசும் மக்கள் வாழும் தமிழகம், கர்நாடகம், ஆந்திரம் போன்ற அண்டை மாநிலங்களிலும் ஓணம் கொண்டாடப்படுகிறது. மலையாள மக்களின் பாரம்பரிய திருவிழாவான ஓணம் அறுவடைத் திருநாளாகவும் கொண்டாடப்படுகிறது. மலையாள மாதமான சிங்கம் மாதத்தில் இது கொண்டாடப்படுவது சிறப்பம்சமாகும்.

# பிரதோஷக்காலம் ஏன் சிறந்ததாக கூறப்படுகிறது தெரியுமா...?



பிறப்பிறப்பில்லா பெரு வாழ்வுக்கு அசுரர்கள், தேவர்கள் இருவரும் ஆசைப்பட்டார்கள். அதற்குத் தேவை அமிர்தம். அதைப் பெற, மேரு மலையை மத்தாக்கி, வாசுகி நாகத்தை கயிறாக்கி, பாற்கடலைக் கடைந்தார்கள். அப்படிக் கடைந்த போது வாசுகி விஷத்தைக்கக்க, பாற்கடலிலும் ஒருவகை விஷம் தோன்றியது. இரண்டும் கலந்து ஆலகால விஷமானது.

அதன் கடுமை தாங்க முடியாமல் தேவர்கள் கயிலாய மலைக்கு ஓடினார்கள். எம்பெருமான் ஈசன், தேவர்களை ஆற்றுப்படுத்தினார். தன் பிரியத்துக்கு உரிய தொண்டரான சுந்தரரை அழைத்து, ஆலகாலத்தை திரட்டி எடுத்துவரச் சொன்னார். சுந்தரரும் அத்தனை விஷத்தையும் ஒரு நாவற்பழம் போலத் திரட்டி, பாத்திரத்தில் வைத்து எடுத்து வந்தார். ஈசன் அதை வாங்கினார். ஆலகாலத் திலிருந்து தேவர்களைக் காப்பதற்காக, அதை அப்படியே விழுங்கினார்.

விஷம் ஈசனுக்கு ஏதாவது துன்பம் விளைவித்துவிடுமோ என்கிற அச்சத்தில் அன்னை பார்வதி, ஈசனின் தொண்டையைப் பிடித்தார். ஆலகாலம், ஈசனின் உள்ளே இறங்காமல், கண்டத்திலேயே தங்கிவிட்டது. விஷம் உண்ட அயர்ச்சியில் அப்படியே படுத்துவிட்டார் இறைவன்.

பார்வதியும் தேவர்களும் பதைபதைத்துப் போனார்கள். ஈசன் தன் திருவிளையாடலைத் தொடர்ந்தார். களைப்பு நீங்கி எழுந்தார். டமருகம் ஒலிக்க, சூலாயுதத்தைச் சுழற்றி ஆடத் தொடங் கினார். தேவர்கள் மட்டுமல்லாது, உலகின் அனைத்து ஜீவராசிகளும் காணத் துடிக்கும் அற்புதத் தாண்டவம் அது.

இறைவனின் தாண்டவம் பலவிதம், ஊழிக்காலம் முடியும் போது நடைபெறும் ஊழிக் கூத்து; அந்தி நேரத்தில் ஆடும் ஆட்டம் என எத்தனையோ வகை. ஈசனின் தாண்டவம் என்பது சூட்சுமமானது.

அதை நுட்பமாக உணரத்தான் முடியும். சூட்சுமமாக நிகழும் ஆண்டவனின் இந்தக் கூத்தை தரிசித்து பலன்பெறவே பிரதோஷ வழிபாடும் பூஜைகளும் செய்யப்படுகிறது.

# வீட்டு வாசலில் காக்கா கரைந்தால் என்ன நடக்கும் தெரியுமா?

**ஒற்றைக் காகம் கரைத்தல்:**

வீட்டு முகப்பில் அல்லது பால்கனியில் ஒரு காகம் உட்கார்ந்து உரத்த குரலில் கரைத்தால், வீட்டிற்கு விருந்தினர்கள் வருவார்கள் என்று பொருள். குறிப்பாக காலையில் இது நிகழ்ந்தால், அன்றைய நாள் முழுவதும் நல்ல செய்திகள் கிடைக்கும்.



**திசை சார்ந்த நற்சகுனங்கள்:**

நண்பகல் நேரத்தில் காகம் வடக்கு அல்லது கிழக்கு திசையில் கரைத்தால், அது மிகவும் சுபமானது எனக் கருதப்படுகிறது. இது வீட்டில் செல்வம் மற்றும் மகிழ்ச்சி வரப்போவதைக் குறிக்கிறது.

**பயணத்திற்கு முன்னர்:**

நீங்கள் பயணத்திற்காக வீட்டை விட்டு வெளியேறும் முன் காகம் கரைத்தால், அந்தப் பயணம் வெற்றிகரமாக முடியும் என்று நம்பப்படுகிறது.

**நீர் பருகும் காட்சி:**

காகம் தண்ணீர் பருகுவதைக் காண்பது மிகவும் நல்லது. இது விரைவில் பண வரவு அல்லது வேலையில் உயர்வு கிடைக்கும் என்பதைக் குறிக்கிறது.

அசுப சகுனங்களாகக் கருதப்படும் நிகழ்வுகள்:

**கூட்டமாகக் கரைத்தல்:**

பல காகங்கள் ஒன்றாகக் கூடி சத்தமிடுவது மிகவும் கெட்ட சகுனம் எனக் கருதப் படுகிறது. இது உங்கள் குடும்பத்தில் ஏதேனும் துன்பம் அல்லது நோய் வரப்போவதைக் குறிக்கலாம்.

**தெற்கு திசை:**

காகம் தெற்கு திசையில் கரைத்தால், அது பித்ருதோஷத்தைக் குறிக்கலாம். இது முன்னோர்களின் ஆதரவு கிடைக்கவில்லை என்பதைக் குறிக்கும்.

**இறந்த காகம்:**

வீட்டின் முன்னால் அல்லது வளாகத்தில் இறந்த காகம் இருந்தால், அது மிகவும் கெட்டது எனக் கருதப்படுகிறது. உடனடியாக சில தூய்மை சடங்குகளைச் செய்ய வேண்டும்.

**சனி கிரகத்தின் தாக்கம்:**

ஜோதிடத்தில் காகங்கள் சனி கிரகத்துடன் தொடர்புடையவை. சனிக் கிழமைகளில் காகங்களுக்கு உணவு வழங்குவது சனி தோஷத்தைக் குறைக்கும்.

**ராகு கெட்ட விளைவுகள்:**

ராகு கெட்ட நிலையில் இருக்கும்போது காகங்களுக்கு உணவளிப்பது நல்லது. இது ராகுவின் கெட்ட தாக்கத்தைக் குறைக்கும்.

காகங்கள் தொடர்பான நம்பிக்கைகள் இந்திய கலாச்சாரத்தில் ஆழமாக வேரூன்றியுள்ளது. இந்த சகுனங்களைப் புரிந்து கொள்வது நம் அன்றாட வாழ்வில் முக்கியமானது.

நற்சகுனங்களைப் பின்பற்றி, அசுப சகுனங்களிலிருந்து தப்பிக்க உதவும் வழிகளைக் கடைப்பிடிப்பது நல்லது.

காகங்களுக்கு உணவளிப்பது போன்ற நற்செயல்களை மேற்கொள்வது சனி மற்றும் ராகுவின் கெட்ட தாக்கங்களைக் குறைக்க உதவும்.


# CLASSIFIEDS

**RENTAL**

HOUSE FOR RENT
@CHROMEPET GANAPATHIPURAM
KABALESHWARAR ST
1 BHK 700 Sq.ft.
G.Flr. VEG ONLY
94444 01070 / 97890 55895

COMMERCIAL SPACE FOR RENT
@CHROMEPET
RESERVE BANK COLONY
1000 Sqft. IST FLOOR
90434 44262

FLATS FOR RENTAL
@ CHROMPET
AVAILABLE 2BHK
PURE VEG
8072230451

**INDEPENDENT HOUSE**

IND HOUSE FOR SALE
@ CHROMPET
NEMILICHERY
2BHK LAND AREA 575 SQFT
BUILT UP AREA-1640 SQFT CCP
80722 30451

**BUILDING CONTRACT**

BUILDING CONSTRUCTION
» RENOVATION » INTERIOR
INCLUDING OHT & SEPTIC TANK
ARCHITECTURAL DESIGN
ENGINEER SUPERVISION
BRANDED MATERIALS
@ 2300 Sqft
KR HOMES
CHROMPET-44
80724 99969

**FLAT SALE**

NEW RESIDENTIAL FLATS FOR SALE
@CHROMPET NEHRU NAGAR
NEARER TO RAILWAY STATIONS & BUS STOP
2 & 3 BHK WITH CAR PARKING
VISHNOO BUILDERS
9884042383
9444042383
9962542382

உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?
GST ROAD NEWS-ல்
விளம்பரம் செய்ய 2 x 4cm Rs. 525/- (Colour) மட்டுமே
044 - 2224 0607 / 89395 26999

**PLOT SALE**

தாம்பரம் முடிச்சூர் அருகில்
வீட்டு மனை விற்பனைக்கு
CMDA APPROVED LAND
ON 30 FEET ROAD
63749 72665

**FLAT RESALE**

FLAT FOR RESALE
@ CHROMPET
GANAPATHIPURAM
2BHK-900 Sqft UDS 440 Sqft
FIRST FLOOR ,NORTH FACING
RS.37 LAKHS (NEGO)
9962003409

FLAT FOR RESALE
@ URAPPAKAM,AMBIKA NAGAR
2BHK WITH BALCONY @CAR PARK
1006 Sqft/ UDS - 500 Sqft
10 YRS OLD, 55 LAKHS
98840 42611

FLAT FOR RESALE
@CHROMEPET
HASTHINAPURAM
ON RP ROAD
OPP: K.L MAHAL
MUTHUMARIAMMAN TEMPLE
1 BHK 553 Sqft
UDS 308 Sqft
2nd FLOOR /16 YEARS OLD
BROKERS EXCUSE
80723 18733

FLAT RESALE
@ CHROMPET RADHA NAGAR
NR .ST MARK'S SCHOOL
1BHK - 615 Sqft
UDS - 318 Sqft
FLAT RESALE
@ PERUNGALATHUR
2BHK 875 SQFT
UDS 460 Sqft
CAR PARKING,2ND FLOOR
80722 30451

FLAT FOR RESALE
@CHROMPET
@RADHA NAGAR
2BHK-742 Sqft
UDS-412 Sqft 1ST FLOOR
@KRISHNA NAGAR
1182 Sqft 484 Sqft 1ST FLOOR
80722 30451

**DISCLAIMER**

Readers are advised to make appropriate enquiries while responding to advertisement in these columns. GST Road News does not vouch for any claims made by the Advertisers. The Printer, Publisher, Editor and Owner of GST Road News Shall not be held responsible for any consequences, in case such claims are found to be false.


## அமெரிக்காவுக்கான அனைத்து அஞ்சல் சேவைகளும் நிறுத்தம்

அமெரிக்காவுக்கான அனைத்து அஞ்சல் சேவைகளையும் இந்திய தபால் துறை ரத்து செய்துள்ளது.

வரிவிதிப்புக்கு பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்காவிற்கான அனைத்து அஞ்சல் சேவைகளையும் இந்தியா நிறுத்தியுள்ளது.

கடிதங்கள், ஆவணங்கள் மற்றும் 100 டாலர் வரையிலான பரிசுகள் உட்பட அமெரிக்காவுக்கு அனுப்பப்படும் அனைத்து வகை அஞ்சல்களையும் நிறுத்தி வைப்பதாக தபால் துறை அறிவித்துள்ளது.

## சென்னையில் சி.பி.ஐ அதிகாரிகள் திடீர் சோதனை

தங்க நகை வியாபார மோசடி தொடர்பாக, சென்னையில் உள்ள மீனம்பாக்கம், பூக்கடை உள்ளிட்ட பகுதிகளிலும், செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு இடத்திலும் சிபிஐ அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.



குரோம்பேட்டை ஜிஎஸ்டி சாலையில் கவிழ்ந்த சிமெண்டு லாரி கிரேன் உதவியுடன் அகற்றப்படும் காட்சி

# தண்ணீர் குடித்துக் கொண்டே ஓட்டிய டிரைவரால் கவிழ்ந்த லாரி

ஆந்திராவில் இருந்து சென்னை கோவிலம்பாக்கத்திற்கு சிமெண்ட் பவுடர் கொண்டு வந்த கண்டெயினர் கம்போஸ் டேங்கர் லாரியை சுனில் (வயது 22) என்பவர் ஓட்டி வந்தார். குரோம்பேட்டை ஜிஎஸ்டி பகுதியில் வரும் பொழுது லாரியில் இருந்த வாட்டர் பாட்டிலை எடுத்து தண்ணீர் குடித்துள்ளார் வண்டி சென்று கொண்டிருக்கும்போதே தண்ணீர் குடித்ததால் லாரியை கட்டுப்படுத்த முடியாமல் வலது புறமாக செல்ல துவங்கியது உடனடியாக சுதாரித்துக் கொண்டு லாரியை இடது பக்கமாக திருப்ப முயற்சி செய்த பொழுது ஸ்டியரிங் லாக் ஆகிவிட்டதால் திருப்ப முடியாமல் ஜிஎஸ்டி சாலையின் மையப் பகுதியில் அமைந்துள்ள மேம்பால தூண்களின் தடுப்பின் மீது மோதி வாகனம் கவிழ்ந்தது .

சுமார் 55 டன் சிமெண்டு டன் 60 டன் எடை 60 அடி நீளம் கொண்ட லாரி ஜிஎஸ்டி சாலையில் குறுக்கே கவிழ்ந்து விழுந்ததால் வேறு வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக குரோம்பேட்டை அரசு மருத்துவமனை முன்பு தடுப்புகள் அமைக்கப்பட்டு வாகனங்கள் ஜிஎஸ்டி சாலையில் அனுமதிக்காமல் மேம்பாலம் வழியாக சென்னை நோக்கி அனுமதிக்கப்பட்டன.

அது மட்டும் இன்றி கவிழ்ந்த கனரக லாரியின் டீசல் டேங்க் உடைந்து டீசல் சாலையில் வெளியேறியது.

நல்ல வேளையாக நள்ளிரவு என்பதால் சிமெண்ட் பவுடர் ஏற்றி வந்த கனரக லாரி அருகே வேறு எந்த வாகனமும் செல்லாததால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது..

போக்குவரத்து புலனாய்வு காவல்துறையினர் கண்டெய்னர் லாரியில் முழுவதும் சிமெண்ட் நிரப்பப்பட்டுள்ளதால் சிமெண்ட் மற்றும் வாகனங்களின் எடையும் 100 டன் அளவிற்கு இருக்கும் என்பதால் மூன்று கனரக கிரேன் மூலம் லாரியை ஜிஎஸ்டி சாலையில் இருந்து அப்புறப்படுத்தினர்.

லாரி 10 மணி நேர கடும் போராட்டத்திற்கு பிறக்கு நிலை நிலை நிறுத்தப்பட்டது,

இந்த சமயத்தில் கடும் போக்குவரத்து நெரிசலாலும் ஏற்பட்டது.

GST ROAD NEWS
விளம்பர விசாரணைக்கு
தொடர்பு கொள்ள:
8939 526 999
044 - 222 363 99

## 4 முறை அழைத்தும் டிரம்பிடம் பேச மறுத்த மோடி



வரி விதிப்புதொடர்பாக பிரதமர் மோடியிடம் பேச்சு வார்த்தை நடத்த கடந்த சில வாரங்களில் அதிபர் ட்ரம்ப் 4 முறை தொலைபேசியில் அழைத்ததாகவும் பிரதமர் மோடி பேச மறுத்துவிட்டதாகவும் ஜெர்மனியின் பிராங்க்பர்ட் நகரில் இருந்து வெளிவரும் பிரபல 'அல்லெஜிமெய்ன் ஜெய்டங்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. ஜப்பானில் இருந்து வெளிவரும் 'நிக்கீ ஏசியா' பத்திரிகையும் செய்தி வெளியிட்டுள்ளது.



குரோம்பேட்டை புருஷோத்தமன் நகர் ஸ்ரீ விஜய கணபதி லட்சுமி நாராயண பெருமாள் ஆலயத்தில் விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு விஜய கணபதி மாட வீதிகளில் ஊர்வலமாக வந்து பக்தர்களுக்கு காட்சியளித்த போது எடுத்த படம்

## சம்மணமிட்டு உணவருந்துவதால் ஏற்படும் நன்மைகள் என்ன...?



நாம் உண்ணும் உணவு முழுமையாகச் செரிமானமாக சம்மணமிட்டு உணவருந்தும் முறையே சிறந்தது. கீழே அமர்ந்து நமக்கு முன்னே இருக்கும் உணவைக் குனிந்து நிமிர்ந்து எடுத்துச் சாப்பிடும் போது, வயிற்றுத் தசைகளுக்கும் உள்ளுறுப்பு களுக்கும் நல்ல பயிற்சி கிடைக்கும்; செரிமானச் சுரப்பிகளும் தூண்டப்படும்.

சம்மணமிட்டு உணவருந்துவதால் 'பசி அடங்கிவிட்டது' என்ற உணர்வை மூளைக்குக் கடத்தும் நரம்பின் செயல்பாடு சிறப்பாக இருக்கும். அதுவே நாற்காலியில் அமர்ந்து உணவருந்தினால், அந்த உணர்வு உடனடியாக மூளைக்குக் கடத்தப்படாமல், கூடுதல் நேரத்தை எடுத்துக்கொள்ளும். இதனால் அதிக உணவு சாப்பிட நேரிடும். தேவைப்படும் கலோரிகளை விட, அதிக கலோரிகள் உடலில் சேர்ந்து உடல் பருமனுக்கு வழிவகுக்கும். எனவே உடல் எடையைக் கட்டுக்குள் வைக்க ஆசைப்படுபவர்கள் சம்மணமிட்டு உணவருந்தும் பழக்கத்தை முதலில் பின்பற்ற வேண்டும். கால்களை மடக்கி, தொடைப் பகுதியில் வைத்துக் கொள்ளும் ஆசன வகையான 'பத்மாசனத்தில்' கிடைக்கும் பலன்களில் பாதி, சம்மணம் எனும் 'சுகாசனத்தின்' மூலம் கிடைக்கும். மேலும், உடல் உறுதிபெறுவதோடு, மூட்டு சார்ந்த நோய்கள் ஏற்படாது.

சம்மணமிடுவதால், இடுப்பைச் சுற்றியுள்ள தசைகளுக்கு வலிமை கிடைப்பதுடன் இடுப்பு இணைப்புகளில் நெகிழ்வுத் தன்மை ஏற்படும். நாற்காலியில் கூனிக் குறுகி அமர்வதைப் போல இல்லாமல், தரையில் சம்மணமிட்டு நிமிர்ந்து அமரும்போது, உடலுக்கு நிலையான தன்மை உண்டாகும். களைப்பு நீங்கி சுறுசுறுப் புடன் உடல் இயங்க, சம்மணம் வழிவகுக்கும். உடலின் மேல் பகுதிக்கு ரத்தம் அதிகமாகப் பாயும். குருதியின் சுற்றோட்டத்தை அதிகரித்து, பல்வேறு நோய்கள் ஏற்படாமல் பாது காக்கும். மனதை அமைதிப் படுத்தவும் ஒரு நிலைப் படுத்தவும் சம்மணமிடும் முறை உதவும்.

## 1200% அதிகரித்த தங்கம் விலை



அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இந்தியா மீது கூடுதல் வரி விதித்துள்ளார். இதற்கிடையே, உள்நாட்டு சந்தையில் தங்கத்தின் விலை ஏற்கனவே அதிகரித்துள்ளது. கடந்த 20 ஆண்டுகளில் தங்கத்தின் விலை சுமார் 1200 சதவீதம் அதிகரித்துள்ளது என்று கூறப்படுகிறது. அதாவது, 2005ஆம் ஆண்டில், தங்கத்தின் விலை 10 கிராமுக்கு சுமார் ரூ.7,000 முதல் ரூ.7,700 வரை வர்த்தகமாகி வந்துள்ளது. ஆனால், இது தற்போது 1200 சதவீதம் அதிகரித்து, 2025ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில், ஒரு சவரன் தங்கம் ரூ.75,760க்கு விற்பனை செய்யப்படுகிறது.

## விஜய் மீது பாய்ந்த 'நடிகர்' ரஞ்சித்



விஜய் பிரதமரை மிஸ்டர் மோடி என்று கூறியதற்கு நடிகர் ரஞ்சித் கண்டனம் தெரிவித்து உள்ளார். அவர் கூறியதாவது:

விஜய் சொடக்கு போட்டு Mr.மோடி ஜீனு சொல்றாரு. 2014 ஏப்ரல் 16ல கொடிசியாவில் மோடி முன்னாடி பூனை மாறி பம்மிட்டு உட்கார்ந்து இருந்திங்களே தம்பி. அன்னைக்கு எதுக்கு வந்து தலைவா படம் ஓடணும்னு வந்து பார்த்தீங்க. பழச எல்லாம் மறந்துட்டீங்களா?"

என இந்து முன்னணி மேடையில் நடிகர் ரஞ்சித் கண்டித்தார்.

WANTED
குரோம்பேட்டை பஸ் ஸ்டாப் அருகில்
உள்ள பிளாஸ்டிக் கம்பெனிக்கு படித்த / படிக்காத
பெண்கள் / ஆண்கள் / பையன்கள்
வேலைக்கு தேவை Part time
S.S.Raj, Dalee Plastics
208, Gst Road, Near Poorvika Cellshop, Chromepet
72996 30890 / 99401 67165

Water taste really GOOD
repute
விநியோகஸ்தர்கள்
வரவேற்கப்படுகிறார்கள்
200மிலி, 300மிலி, 500மிலி, 1லி பெட்
(சென்னை நகரம் மட்டும்)
20 Ltr Can
www.reputeh2o.com
98845 44444

## அழகை மெருக்கேற்ற உதவும் சாத்துக்குடி



அழகை மெருகேற்றிக்கொள்ள என்னவெல்லாம் செய்ய முடியுமோ, அனைத்தையும் செய்கிறோம். எவ்வளவு விலையாக இருந்தாலும் கடைகளில் விற்கும் அழகுசாதனப் பொருட்களை வாங்குகிறோம்.

ஆனால், இலகுவாக எந்நேரத்திலும் கிடைக்கக்கூடிய பொருட்களை பயன்படுத்துங்கள். அந்த ஒரு பொருள்தான் சாத்துக்குடி. சுவீட் லைம் என்று கூறப்படும் சாத்துக்குடியானது, பல்வேறு ஆரோக்கிய நன்மைகளைக் கொண்டுள்ளது.

இதில் இரும்பு, வைட்டமின் ஏ, வைட்டமின் சி, கால்சியம் போன்ற ஊட்டச்சத்துக்கள் அடங்கியுள்ளன. சாத்துக்குடியில் வைட்டமின் சி அதிகமாக இருப்பதால் சரும பராமரிப்பில் முக்கிய பங்காற்றுகிறது. மேலும் வயது முதிர்ச்சியினால் ஏற்படும் சரும மாற்றத்துக்கு எதிராக போராடும்.

உடலிலுள்ள நச்சுக்களை அகற்றும் செயல்முறை சரியான இடைவெளியில் நடப்பது அவசியமாகும். அவ்வாறு நடந்தால்தான் சருமத்துக்கு ஊட்டம் கிடைக்கும். அதுமட்டுமின்றி எந்த பாதிப்பும் ஏற்படாது. முகப்பரு பிரச்சினைகளும் ஏற்படாது.

இதில் உள்ள ஒட்சிசன் பண்புகள் மற்றும் பாக்டீரியா எதிர்ப்பு பண்புகள் கண்புரை உருவாகுவதை தடுக்கிறது. அதுமட்டுமின்றி இந்த சாத்துக்குடியில் ஜூஸ் செய்து பருகுவதோடு மட்டுமின்றி ஃபேஷியலாகவும் உபயோகப்படுத்தலாம். சருமத்தில் படிந்துள்ள கறைகளை அகற்றி, ப்ளீச்சிங் செய்வதற்கும் பயன்படும். இவ்வாறு எண்ணற்ற பல நன்மைகள் செய்யவல்லது சாத்துக்குடி.

## அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் நாளில் சஸ்பெண்ட் நடவடிக்கை ரத்து

அரசு ஊழியர்கள் ஓய்வு பெறும் நாளில் சஸ்பெண்ட் நடவடிக்கை கிடையாது என தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. அதன்படி ஓய்வுபெறும் நாளில் இனி அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மீதான சஸ்பெண்ட் நடவடிக்கை இருக்காது. அதற்கான விதிகளில் திருத்தம் செய்து தமிழ்நாடு அரசு இந்த அரசாணையை வெளியிட்டு உள்ளது.

## ஓணம் ஸ்பெஷல்: அடை பிரதமன்



**தேவையான பொருட்கள் :** அரிசி 1/2 டம்ளர், தேங்காய்ப்பால் 4 டம்ளர், வெல்லம் 2 டம்ளர், ஏலக்காய் தூள் சுவைக்கு, பால் 1 டம்ளர், நெய் தேவைக்கு, தேங்காய் துண்டுகள் கைப்பிடியளவு, முந்திரி தேவையான அளவு, உலர்திராட்சை 2 ஸ்பூன் **செய்முறை:** வெல்லத்தை தண்ணீர் கரைத்து வடிகட்டி வைக்கவும். அரிசியை ஊற வைத்து நைசாக கெட்டியாக அரைத்துக் கொள்ளவும். அரைத்த மாவை, வாழை இலையில் நெய் தடவி, மெலிதாக பரப்பி, மெதுவாக மடித்து, நூலால் கட்டி, இட்லி தட்டில் வைத்து வேக வைத்துக் கொள்ளவும்.வெந்த மாவு ஆறியதும் இலையிலிருந்து உரித்து எடுத்து, மிகவும் சிறு துண்டங்களாக வெட்டிக் கொள்ளவும். வாணலியில் நெய் விட்டு முந்திரி, திராட்சை, தேங்காய் துண்டுகளை பொன்னிறமாக வறுத்துக் கொள்ளவும். அதனுடன் அரிசி அடை துண்டுகளை பிரட்டி, பாலை சேர்த்து கொதிக்க விடவும். அடுத்து அதில் வடிகட்டி வைத்துள்ள வெல்லத்தை சேர்த்து கொதிக்க விடவும். நன்கு வெந்ததும் தேங்காய் பாலை சேர்த்து, ஏலக்காய் பொடி சேர்த்து இறக்கி பரிமாறவும்.

SPECIAL INVITATION
குரோம்பேட்டையில் உள்ள
பிரபல நிறுவனத்திற்கு Retd,
SENIOR CITIZEN, LADIES தேவை
AGE - 45 TO 75, SSLC AND ABOVE
Work From Home
Unlimited Incentive, Only KYC Docs
73586 21949

RAAJ INSTITUTE
B.E., B.Com., M.B.A., Diploma
School Tuition for 6th to 12th
8th Pass Directly Join 10th
10th Pass Directly Join +2
STATE / NIOS / CBSE
Spoken English & Hindi
Tally,MS Office,C,C++
No.75, Station Road, Radha Nagar, Chrompet
90032 67050

WANTED
FEMALE STAFF FOR OFFICE
DESK JOB/AGE 22-54
SALARY - Rs. 10,000/-
WASCA - 3G AQUA
99520 32070
98411 30387

BUYING / SELLING
BUYING / SPOT CASH
WORKING AND NOT WORKING
A/C, BRASS,STAINLESS STELL,
FRIDGE, OLD COMPUTER, LAPTOP,
UPS, BATTERIES, MUSIC SYSTEM,
WATER HEATER, GYM ITEMS,
WOODEN FURNITURE, SOFA SET,
COT, BEURO, DINING SET,
DRESSING & OFFICE TABLE,
OLD ALUMINIUM
ALL A TO Z SCRAPS
SRIRAM TRADERS
94441 33979

NETLON
SAI SRI DHARSHINI ENTERPRISES
Plot No:10, Door.13, Mageshwari Nagar, 3rd Street,
Hasthinapuram, Chennai - 600 064.
SAINT-GOBAIN
MOSQUITO NET
PROPRIETOR M.VENKATESH, B.COM.,
97103 55252 / 86109 10731





## குரோம்பேட்டையில் 22,000 விநாயகர் சிலைகளுடன் கண்காட்சி அமைச்சர் தா.மோ அன்பரசன் திறந்து வைத்து பார்வையிட்டார்

குரோம்பேட்டை ராதா நகர் பகுதியில் விநாயகர் பக்தர் சீனிவாசன் 19வது ஆண்டாக 22,000 விநாயகர் சிலைகளுடன் கண்காட்சி நடத்தி வருகிறார். ஆகஸ்டு 27 முதல் செப்டம்பர் 7ஆம் தேதி வரை 12 நாட்கள் நடைபெறுகின்ற கண்காட்சியில் விதவிதமான பிள்ளையார் சிலைகள் வைக்கப்பட்டு பொது மக்களுக்கு இலவச அனுமதி வழங்கப்படுகிறது. இதில் பல்வேறு உலோகங்களான பிள்ளையார்கள், நீர் வீழ்ச்சியில் குளிப்பது போல் உள்ள பிள்ளையார்,மயில் வாகனத்தில் பிள்ளையார் போன்று பல்வேறு வண்ணங்களில் பிள்ளையார் சிலைகள் அமைக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. கண்காட்சியை தமிழக சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்து பார்வையிட்டார். நிகழ்ச்சியில் இ.கருணாநிதி எம்எல்ஏ, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி உட்பட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

## மைக்ரேன் தலைவலி என்றால் என்ன? காரணங்களும், தடுக்கும் வழிகளும்!



இன்றைய பரபரப்பான பணி சூழலில், மைக்ரேன் எனப்படும் ஒற்றைத் தலைவலி பலருக்கும் ஒரு பொதுவான பிரச்சனையாகிவிட்டது. வேலை அல்லது தொழில் வாழ்க்கையில் ஏற்படும் மன அழுத்தத்தை தவிர்க்க முடியாது. ஆனால், மைக்ரேன் தலைவலியை தூண்டும் காரணங்களை தெரிந்து கொண்டு, அவற்றை புத்திசாலித் தனமாக தவிர்ப்பதன் மூலம் இந்த பிரச்சனைக்குத் தீர்வு காணலாம் என மருத்துவர்கள் கூறுகின்றனர்.

மைக்ரேன் தலைவலி வருவதற்கான காரணங்கள்:

மதுபானம், பதப்படுத்தப்பட்ட உணவுகள், மோனோ சோடியம் குளூட்டமேட் , மற்றும் செயற்கை இனிப்புகள் போன்ற சில உணவு வகைகளும் ஒற்றை தலைவலிக்கு காரணமாக இருக்கலாம்.

திடீர் தட்பவெப்பநிலை மாற்றங்கள், பிரகாசமான விளக்குகள், அதிக சத்தம் மற்றும் சில வாசனை திரவியங்கள் ஆகியவையும் மைக்ரேனை தூண்டலாம்.

பெண்களுக்கு, மாதவிடாய் அல்லது கர்ப்ப காலத்தில் ஏற்படும் ஹார்மோன் மாற்றங்கள் ஒற்றை தலைவலியை ஏற்படுத்தலாம்.

ஒழுங்கற்ற தூக்க பழக்கம், அதிகப்படியான மன அழுத்தம், சரியான நேரத்தில் உணவு உண்ணாமல் தவிர்ப்பது போன்றவையும் இதற்கு முக்கிய காரணங்களாக இருக்கலாம்.

மைக்ரேன் தலைவலியைத் தடுப்பதற்கான வழிகள்:

உடலில் நீர்ச்சத்து போதுமான அளவு இருக்க வேண்டும். எனவே தேவையான அளவு தண்ணீர் குடிப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

பதப்படுத்தப்பட்ட மற்றும் துரித உணவுகளை தவிர்ப்பது அவசியம். தேநீர் அல்லது காபி அருந்தும் பழக்கத்தை கட்டுக்குள் வைத்துக்கொள்வதும் நல்லது.

இரவில் குறிப்பிட்ட நேரத்தில் படுக்கைக்கு செல்வது, காலையில் குறிப்பிட்ட நேரத்தில் எழுவதால் ஒற்றை தலைவலியை தவிர்க்கலாம்.

விட்டமின் பி 2 (ரிபோபிளேவின்) சத்து, மைக்ரேன் தலைவலி வராமல் தடுக்க உதவுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

## டிரம்ப் விதித்த வரிகள் சட்டவிரோதமானவை; அமெரிக்க கோர்ட்டு அதிரடி

டிரம்ப்பின் வரிவிதிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராக அமெரிக்காவின் நியூயார்க் நகரத்தில் உள்ள வர்த்தக கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டது. இதனை விசாரித்த நீதிபதிகள், டிரம்ப் பிறப்பித்துள்ள உத்தரவுகள் அவரின் அதிகார மீறலாகும் என்று விமர்சித்து, அனைத்து உத்தரவுகளும் நிரந்தரமாக ரத்து செய்வதாக தெரிவித்தனர். இந்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் அமெரிக்க அரசு மனு தாக்கல் செய்தது.

இந்த மனுவை விசாரித்த மேல்முறையீட்டு நீதிமன்றம், அமெரிக்க அதிபர் டிரம்ப் விதித்த வரிகள் சட்டவிரோதமானவை என்றும், இத்தகைய வரிகளை விதிக்க டிரம்ப்புக்கு எந்த அதிகாரமும் இல்லை என்று அதிரடியாக தீர்ப்பு அளித்துள்ளது. தேசிய அவசர நிலையை அறிவிக்கவோ, அல்லது உலகில் உள்ள அனைத்து நாடுகள் மீதும் வரிகளை விதிக்கவோ டிரம்ப்புக்கு அதிகாரம் இல்லை என நீதிபதிகள் தங்கள் உத்தரவில் தெரிவித்துள்ளனர்.

## தொடரும் விலை ஏற்றம்: ரூ. 77000 த்தை தாண்டிய தங்கம் விலை

ஆகஸ்ட் 29 ஒரே நாளில் இருமுறை உயர்ந்த தங்கம் விலை ரூ.76,280க்கு விற்பனையானது. இந்த நிலையில் சென்னையில் ஆபரணத்தங்கம் விலை நேற்று காலை, பவுனுக்கு ரூ.680 உயர்ந்து ரூ.76,960க்கு விற்பனையாகிறது. கடந்த 2 நாட்களில் ரூ.1,720 உயர்ந்து ஒரு பவுன் தங்கம் விலை ரூ.77,000 நெருங்கியுள்ளது வாடிக்கையாளர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## டிரம்ப் வரிவிதிப்பால் வீழ்ந்த சீன கார் நிறுவனம்

அமெரிக்கா, சீனா இடையிலான வர்த்தக போரின் காரணமாகவும் சீனாவில் டெஸ்லா நிறுவனம் விற்பனையை துவங்கியதாலும், சீனாவின் பிரபல கார் நிறுவனமான `BYD யின்' விற்பனை வீழ்ச்சி அடைந்து உள்ளது.

நிர்ணயித்த இலக்கை விட 55% சதவீதம் குறைவாக விற்பனையானதால் அந்நிறுவனத்துக்கு 30% லாபம் சரிவை சந்தித்தது






## வைகை ஆற்றில் மனுக்களை வீசியது யார்? விசாரணை தீவிரம்.

உங்களுடன் ஸ்டாலின் முகாமில் தரப்பட்ட மனுக்களை ஆற்றில் வீசியது தொடர்பாக, திருப்புவனம் வட்டாட்சியர் அலுவலகத்தில் கடந்த 2 நாட்களாகப் பணிபுரிந்த அலுவலர்கள், பணியாளர்களிடம் விசாரணை நடைபெறுகிறது. மேலும், இது தொடர்பாக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் கோட்டாட்சியர் மனு அளித்துள்ளார். அரசுக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில், இது போன்ற சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

நடவடிக்கை எடுக்கவில்லை... ஆற்றில் கிடந்த மனுக்களில் பூவந்தியைச் சேர்ந்த செல்வி என்பவரது மனுவும் இருந்தது. இதுகுறித்து அவரிடம் கேட்டபோது, "பட்டா மாறுதல் குறித்து மனு கொடுத்திருந்தேன். மனு மீது உடனடியாக நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் கூறினர். இதுவரை நடவடிக்கை எடுக்காத நிலையில், வைகை ஆற்றில் எங்களது மனுக்களை ஏன் வீசவேண்டும்? சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.


உங்கள் வீட்டை உடனே வாடகைக்கு விட வேண்டுமா?

GST ROAD NEWS-ல்

விளம்பரம் செய்ய 2 x 4cm Rs. 525/- (Colour) மட்டுமே

044 - 2224 0607 / 89395 26999








Published by K.MURUGANANTHAM Plot No:4/7, Padmanaban Nagar, Karumariamman Kovil First Street, Chrompet - 600 044. Printed by him B.Ashok kumar at RATHNA OFFSET PRINTERS, No:40, Peter's Road, Royapettah, Ch- 14. Editor: K.MURUGANANTHAM. RNI No. TNBIL / 2013 / 48725